Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 74

செவ்வாய்க்கிழமை
08 பெப்ரவரி 2022

தை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=




"கரண்ட் கட் இல்லையெண்டுவினம். ஆனால் கட் ஆகும். விலையேறாது எண்டுவினம். ஆனால் ஏறும். அதுதான் எங்கட தலைவிதி"

## வடக்கில் மீண்டும் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
நாளை மறுதினம் வியாழக்கி ழமை முதல் எதிர் வரும் ஞாயிற்றுக் 15

## போத்தல் குடிதண்ணீரின் விலை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 8
போத்தல் குடிதண்ணீரின் அதிக பட்ச சில்லறை விலையை அரசு கடந்த வாரம் நீக்கி யதை அடுத்து, 15

### மூன்றாண்டுகளுக்கு முன்னர்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதான 8 பேர் நேற்று விடுவிப்பு

### ஜெனிவாவை சமாளிக்க வியூகம்

வவுனியா, பெப்ரவரி 8
கிளைமோர் குண்டுகளை உடைமையில் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 2019ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 3 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். 15



## திட்டமிட்டவாறு நாடாளுமன்றம் இன்று கூடும்!

கொழும்பு, பெப். 8
நாடாளுமன்றத்தை இன்று முதல் 11ஆம் திகதி வரை கூட்டுவதற்கு பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலர் நாயகம் 15

## பொருளாதார நெருக்கடி; கைகொடுக்கும் இந்தியா

### வெளிவிவகார அமைச்சர்கள் பேச்சில் இணக்கப்பாடு

கொழும்பு, பெப். 8
இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இந்தியாவிடமிருந்து மேலும் உதவிகள் வழங்குவது தொடர்பிலும், இலங்கையில் இந்திய முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பிலும், 15



### பெற்றோலியக் கூட்டுத்தாபன

## எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது

### அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, பெப். 8
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருப் பினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு இதுவரையில் எந்தவொரு தீர்மானமும் எடுக் 15

## ரூ.52 லட்சத்து 20 ஆயிரத்துக்கு இந்தியாவின் 135 படகுகள் ஏலம்

யாழ்ப்பாணம், பெப். 8
காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 135 இந்தியப் படகுகள் 52 லட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.
இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் காரைநகர் கடற்ப 15

## மின்துண்டிப்பு இல்லை!

### பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தகவல்

கொழும்பு, பெப். 8
மின்சாரத் துண்டிப்புக்கான எந்தவொரு கோரிக்கையையும், மின்சாரசபை முன்வைக்கவில்லையென பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தற்போது உற்பத்தி செய்யப்படும் மின்சாரக் கொள்ளளவு நாட்டின் மின்சாரக் கேள்வியைப் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். 15



## வீதியோரத்தில் சடலம் மீட்பு

### விபத்தா? கொலையா? பொலிஸார் விசாரணை

மன்னார், பெப். 8
மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பள்ளமடு- விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் நேற்றுத் திங்கட் 15

## 13ஆவது திருத்தத்துக்கு எதிராக போராடுவது படுமுட்டாள்தனம்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது படுமுட்டாள்தனமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரி 15



## வரணியில் அதிரடிப்படை பொதுமகன் மீது சூடு!

### கைதான 5 படையினரும் பிணையில் விடுவிப்பு

கொடிகாமம், பெப். 8
சட்டவிரோத மதுபான உற்பத்தி நடைபெறுவதாகத் தெரிவித்து பொதுமகன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் கைதான விசேட அதிரடிப் படையினர் 5 பேரும் நேற்று மன்றால் பிணையில் விடுவிக்கப் 15

## துணைமருத்துவ தொழிற்சங்க போராட்டத்தால் மக்கள் அவதி

யாழ்ப்பாணம், பெப். 8
சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட 7 பிரதான கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத் தொழிற் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புங்குடுதீவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 8

புங்குடுதீவு 10 வட்டாரப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த நபரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 4 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-23)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 8

கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் துன்னாலை குடவத்தைப் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதாகியவர் 36 வயதுடைய நபர் எனவும் அவரின் உடைமையில் இருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது எனவும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (வ-23)

## கணவரின் தாக்குதலில் மனைவி உயிரிழப்பு

கொழும்பு, பெப். 8

அயகம, மாவத்தஹேன, பியம்புர பகுதியில் உள்ள வாடகை வீடொன்றில் வசித்துவந்த பெண் ஒருவர் தனது கணவரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தாக்குதலில் உயிரிழந்தவர் கோனாரமுதியன்சேலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான தயா நிஷாந்தி ஹரிச்சந்திர (வயது-37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டின்போது, கனமான பொருளால் கணவர் மனைவியின் தலையில் தாக்கியுள்ளார் என்றும், மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரான 27 வயதுடைய கணவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

### சட்டவிரோதமான முறையில்

# 4 மாடுகள் நேற்றுமுன்தினம் இறைச்சிக்கு வெட்டப்பட்டன

### ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் சம்பவம்



**யாழ்ப்பாணம், பெப். 8**

**ஊர்காவற்றுறைப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சரவணை மற்றும் வேலணைப் பகுதிகளில் சட்டவிரோதமாக 4 மாடுகள் நேற்றுமுன்தினம் இறைச்சியாக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

சரவணைப் பகுதியில் ஒரு மாடும், வேலணைப் பகுதியில் மூன்று மாடுகளுமே இவ்வாறு இறைச்சியாக்கப்பட்டுள்ளன. மேய்ச்சல் தரவையில் கட்டப்பட்டிருந்த மாடுகளை அவிழ்த்துச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவற்றை இறைச்சியாக்கிவிட்டு, கழிவுகளை பற்றைக்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மாடுகளின் உரிமையாளர்களால் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகளில் தொடர்ச்சியாக வளர்ப்பு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்ற நிலையில், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-20.23)

## கொள்ளையில் ஈடுபட்ட இளைஞனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், பெப். 8

கொள்ளையில் ஈடுபட்ட இளைஞனுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கோண்டாவில் டிப்போச் சந்திப் பகுதியில் கடந்த சனிக்கிழமை பூசகர் ஒருவரைத் தாக்கி அவரிடமிருந்த 17ஆயிரம் ரூபா பணத்தைப் பறிக்க சந்தேகநபர் முயன்றுள்ளார். இதையடுத்து கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. சந்தேகநபர் கோண்டாவில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபருக்கு எதிராக உழவு இயந்திர பற்றரி திருடிய வழக்கொன்றும் முன்னர் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-23)

## உடைமையில் கஞ்சா 5,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், பெப்.8

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதாகிய வருக்கு நீதிமன்று 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

நவாலி பிரதான வீதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் சந்தேகநபரிடமிருந்து 250 கிராம் கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபரை கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிமன்றால் 5ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-125)

## வெட்டுக் காயங்களுடன் இளம் குடும்பஸ்தர் மீட்பு

வவுனியா, செட்டிகுளத்தில் தலையில் வெட்டுக்காயங்களுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீட்கப்பட்டு வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியோரம் தலையில் வெட்டுக்காயங்களுடன் வீழ்ந்து கிடந்த குடும்பஸ்தர் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுநோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியம் கண்ணன் (வயது-33) என்பவரே காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் சண்முகபுரம் நோக்கிச் சென்ற குடும்பஸ்தர் இரவாகியும் வீடு திரும்பவில்லை.

கங்கன்குளம் சந்திப் பகுதியில் தலையில் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் இருக்கிறார் என அவரது மனைவிக்கு அதிகாலை ஒரு மணியளவில் கிடைத்த தகவலையடுத்து மனைவி அங்கு சென்று கணவரை மீட்டுள்ளார்.

அந்தப் பகுதி மக்களின் துணையுடன் நோயாளர் காவு வண்டி மூலம் அவர் வவுனியா வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-18)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 8

துன்னாலை, வேம்படி பகுதியில் ஹெரோய்னுடன் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மல்லாவி அனிஞ்சியன்குளம் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். அவரது உடைமையிலிருந்து 900 மில்லி கிராம் ஹெரோய்னும், ஹெரோய்ன் விற்பனை மூலம் ஈட்டினார் எனக் கருதப்படும் 50 ஆயிரத்து 660 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-23)

## கடன் கொடுக்க மறுத்ததால் பாண் வண்டி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 8

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரது பாண் வண்டி அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரால் அடித்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வேம்படி சந்திப்பகுதியில் விற்பனையில் ஈடுபட்டிருந்த சமயத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடனுக்கு பாண் தர மறுத்தமையே தாக்குதலுக்கு காரணம் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

**இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 21பேரின் விளக்கமறியலை எதிர்வரும் 22ஆம் திகதிவரை நீடித்தது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்.**

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்.

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். பருத்தித்துறைக் கடற்பரப்பில் இழுவைப் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் பருத்தித்துறை மீனவர்கள் இழுவைப் படகுகளை முற்றுகையிட்டு தமிழக மீனவர்களை மடக்கிப் பிடித்திருந்தனர். அதன்பின்னர் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைது செய்த நிலையில், நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், தமிழக மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

அவர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்த நிலையில், நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. தமிழக மீனவர்களின் விளக்கமறியலை நீடித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், மீனவர்களிடம் வாக்குமூலம் பெறுவதற்கும் அனுமதி வழங்கியது.

அத்துடன் தமிழக மீனவர்களின் படகில் இருந்து கைப்பற்றப்பட்ட 100 கிலோவுக்கும் அதிகமான மீன்களை விற்பனை செய்வதற்கு மன்றில் அனுமதி கோரப்பட்டது. அதற்கு அனுமதி வழங்கிய நீதிமன்றம் விற்பனை செய்யும் பணத்தை மன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது. (எ-23)

## மன்னாரில் தராசுகளுக்கு முத்திரையிடப்படுகின்றது

மன்னார், பெப். 8



மன்னார் மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் பாவிக்கப்படும் தராசுகளைப் பரிசோதித்து 2022 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடும் பணியை அளவீட்டு அலகுகள் நியமனங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

தலைமன்னார், பேசாலை எருக்கலம்பிட்டி தாராபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பழுதடைந்துள்ள தராசுகளைக் குறித்த இடத்திலேயே திருத்தி முத்திரையிடும் பணிகள் இடம்பெற்றதைக் காணமுடிந்தது. (வ-60)

## ஹிஜாஸுக்கு பிணை

கொழும்பு, பெப்.8

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுப் பிணை வழங்கியது.

இன, மதங்களுக்கு இடையில் அமைதியின்மையைத் தோற்றுவித்தார் என்று கூறி 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு புத்தளம் மேல் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்திருந்தது. இதுதொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் பிணை வழங்கப்பட்டது. (எ-இ)

## திருட முற்பட்டவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், பெப். 8

திருநெல்வேலி சந்தையில் வாகனத்திலிருந்த பொருள்களை திருட முற்பட்ட ஒருவரை 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி பொதுச்சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகை அத்தியாவசியப் பொருள்களுடன் வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்த பொருள்களை சந்தேகநபர் திருட முற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதை அவதானித்த பொதுமக்கள் அவரைப் பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (வ-23)



## திருட்டு சந்தேகநபர்களுக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப்.8

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் உட்பட இருவர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரணவாயில் உள்ள பாடசாலை ஒன்று உடைக்கப்பட்டு இலத்திரனியல் பொருள்கள் திருடப்பட்டமை, ஆலயம் ஒன்றில் நடந்த திருட்டுச் சம்பவம், கரணவாய் பகுதியில் வீடு உடைத்து நகைகள் திருடப்பட்டமை போன்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுச் சம்பவங்களின் பிரதான சந்தேகநபரும், திருட்டுப் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 32 வயதுப் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)




**வீணைக்கார அமைச்சருக்கு இப்ப கட்டம் சரியில்லைப்போல. எங்க கால் வைச்சாலும் அங்க ஏதோ ஒரு வில்லங்கம் ஆளுக்கு வெடிக்குது. இவ்வளவுகாலமா ''நான் ஆயுதப் போராட்டத்தை விட்டிட்டு ஜனநாயக நீரோட்டத்துக்க வந்திட்டன்'' எண்டு வெளியில காட்டின விம்பம், சுப்பர்மடத்தில ஒரே செக்கனில தூளாப் போட்டுது. வீணைக்காரரின்ர இத்தனை நாள் அரசியல்வரலாற்றில இப்பிடி ஒருக்காலும் ஆள் வெறிபிடிச்ச மாதிரி கத்தினதில்லை. தியேட்டருக்குள்ள அப்பிடி இருந்தாலும், வெளியிலபோனால் சாந்தசொரூபியாத்தான் ஆள் நிதானமாக கதைக்கும். என்ன செய்ய, எல்லாருக்கும் வயசாக பக்குவம் வருமெண்டுவினம், இவருக்கென்னடாவெண்டால் மாறி நடக்குது.**

**சரி, இப்ப விசயம் அதில்லை. கச்சதீவு திருவிழாவுக்கு இந்தியன் மீனவர்களை வரவிடுறேலை எண்டு கச்சேரியில நடந்த மீட்டிங்கில எல்லாரும் கலந்து பேசி ஒருமனதா எடுத்த முடிவை, வீணைக்காரர் தன்ர இஷ்டத்துக்கு மாத்த வெளிக்கிடுறார் எண்டு புதிசா ஒரு பிரச்சினை கிளம்பியிருக்கு. எப்பிடியாவது இந்தியாவோட ஒட்டவேணும் எண்டது வீணைக்காரரின்ர கனநாள் ஆசை. இந்தமுறை கச்சதீவுத் திருவிழாவுக்கு தமிழக மீனவர்களை அனுமதிக்கிறேலை எண்டு எடுத்த முடிவு, அவரின்ர ஆசைக்கு வழி திறந்து குடுத்திருக்கு. 'தமிழக மீனவரையும் கச்சதீவு அந்தோனியாரைக் கும்பிட விடவேணும்' எண்டு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தனக்கு நெருக்கமான இரண்டாம் கட்டத் தலைவர் ஒராளிட்ட சொல்லியிருக்கிறார். அவரும் ஏற்பாடு பண்ணுறன் எண்டுட்டு, வீணைக்காரரோட போன் எடுத்துக் கதைச்சிருக்கிறார். பழம் நழுவி போனில விழுகிறதை சும்மா விடுவாரோ வீணைக்காரர்? அப்பிடியே கப்பெண்டு பிடிச்சுக் கொண்டு.**

**''ஒண்டுக்கும் பயப்பிடவேண்டாம். தமிழக மீனவர்களும் கச்சதீவுத் திருவிழாவுக்கு வரக்கூடிய மாதிரி நான் ஏற்பாடு பண்ணுறன்'' எண்டு வாக்குக் குடுத்திருக்கிறார்.**

**ஆனால் இப்ப நிலைமை முந்தின மாதிரி இல்லை. ஏற்கனவே தமிழக மீனவர்களில 'எங்கட மீனவர்கள் கடுப்பில இருக்கிற நேரத்தில, இப்பிடி கச்சதீவுக்கு ரண்டுபகுதியையும் வரவைக்கிறதையும், இதையே சாட்டாய் வைச்சு,மீனவர்களுக்கிடையில ஒரு புரிந்துணர்வுப் பேச்சுவார்த்தையை நடத்தலாம் எண்டு பிளான் போடுறதும் திரும்பவும் வீணைக்காரர் குளிக்கப் போய், சேறு பூசின கதையா மாறுறதுக்குத்தான் கனக்கச் சான்ஸ் இருக்கு. ஏனெண்டால் ஏற்கனவே வீணைக்காரர் இந்திய மீனவருக்குச் சார்பாய் நடக்கிறார் எண்டதுதான் எங்கட மீனவர்களின்ர குற்றச்சாட்டு. இந்தநிலையில, இப்பிடி ஒரு கச்சதீவு மீட்டிங்கை ஒழுங்குபடுத்துறதால என்னென்ன கூத்தெல்லாம் நடக்கப்போகுதோ?**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவகற்றல் நிலையத்துக்கு கல்லுண்டாயில் அடிக்கல்!

## நாளொன்றுக்கு 10 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளையை உற்பத்தி செய்யமுடியும்

**யாழ்ப்பாணம், பெப். 8**

**வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளியில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**



கல்லுண்டாய் சேதனப் பசளை உருவாக்க நிலையத்துக்கு அருகில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் 4 ஏக்கரில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமாரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யசோதா உதயகுமார், வலி.தென்மேற்குப் பிரதேசசபை தவிசாளர் அ.ஜெபநேசன் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர். இந்த திண்ம கழிவு உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் நாளொன்றுக்கு 10 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளையை உற்பத்தி செய்யமுடியும் என வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார். (வ-125)

## வவுனியா கூமாங்குளத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

### பொலிஸார் விசாரணை!!

வவுனியா, பெப்.8

வவுனியா, கூமாங்குளத்திலுள்ள வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலிருந்த முதியவர் சமையலில் ஈடுபட்ட வேளையில் திடீரென எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-110)



## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 8

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.41 மணியிலிருந்து முற்பகல் 10.23 மணிவரை இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.8

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தால் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் தலைமையுரையை பரிபாலன சபைத்தலைவர் த.ஜோதிலிங்கம் ஆற்றவுள்ளார். சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் நித்தியபாபுரன் 'அறம் உரைத்த ஆண்டி' எனும் விடயபொருளில் நிகழ்த்தவுள்ளார். (ச)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்


யாழ்ப்பாணம், பெப். 8

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி, உருத்திரபுரம் உருத்திரநாயகி உடனாய உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் நாளை காலை 6.30 மணிக்கு பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேசமாணி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராசக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ச)

### முட்டாசுக் கடைச் சந்தி – ஐந்து சந்தி வீதி

## மீள்புனரமைப்புக்காக போக்குவரத்துத் தடை

யாழ்ப்பாணம், பெப்.8



காரைநகர் மானிப்பாய் வீதியின் முட்டாசுக் கடை சந்தி தொடக்கம் ஐந்து சந்தி வரையான வீதியின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள் ளது.

குறித்த வீதி மீள்புனரமைப்பு செய்யப்படும் நிலையில் ஐந்து சந்தி பகுதியில் உள்ள பாலமும் முட்டாசுக் கடை சந்தியை அண்மித்த பாலமும் முற்றாக இடிக்கப்பட்டு மீள்புனர் நிர்மாணம் இடம்பெறுகின்றது. இந்த நிலையில் வலிகாமம் தென்மேற்கு, வலி. மேற்கு, காரைநகர் போன்ற பகுதிகளில் இருந்து பயணிப்போர் நாவலர் வீதியூடாக காங்கேசன்துறை வீதி மூலமும் மாற்று வழிகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இது குறித்து யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, ஒரு மாதகாலத்தில் இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்து போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார். (ச-125)

## விளையாட்டு மைதானத்தை சீரமைத்துத் தரக் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட பெரியசாளம்பன், தட்டையர்மலை தமிழ் விளையாட்டுக்கழகத்தின் மைதானத்தை சீரமைத்து தருமாறு விளையாட்டுக்கழகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தட்டையர்மலை, பெரியசாளம்பன் பகுதியில் 2 ஏக்கர் பரப்பளவு கொண்ட தமிழ் விளையாட்டுக் கழகத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியை கிராம இளைஞர்கள் பயன்படுத்தி வந்தனர்.

தற்போதைய கொரோனாத் தொற்றுக் காரணமாக பயன்பாடின்மையால் மைதானம் பற்றைக்காடாக மாறியுள்ளது.

இதனால் குறித்த மைதானத்தைத் துப்பரவு செய்து தருமாறு விளையாட்டுக்கழகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-19)

### ஏ-32 வீதியிலுள்ள

## விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய மரங்களை அகற்ற நடவடிக்கை!

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி ஏ-32 வீதியின் இருபுறத்திலும் உள்ள விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய மரங்களை வெட்டி அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது எனப் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அரச மரக்கூட்டுத்தாபனம் என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளன. தற்போது குறித்த வீதியில் அமைந்துள்ள ஆபத்தை விளைவிக்கும் மரங்களை அடையாளப்படுத்தும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். உத்தியோகத்தர்களால் இடம்பெறுகின்றன. அழிந்த மரங்களை அகற்றி



ஏனைய மரங்களின் கிளைகளை அகற்றுவதன் மூலம் ஏ-32 வீதியில் ஏற்படக்கூடிய விபத்துக்களையும் தவிர்க்கலாம் என பிரதேச சபை தவிசாளர் மேலும் தெரிவித்தார். (ச-13)

### கிளிநொச்சியில்

## வாரநாள்கள் முழுவதும் இனி ம.உ.ஆணைக்குழுவின் பணி!

யாழ்ப்பாணம், பெப். 8

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் கீழ் இயங்குகின்ற கிளிநொச்சி உப அலுவலகத்தின் பணிகள் நேற்று முதல் வார நாள்கள் முழுவதும் முன்னெடுக்கப்படும் என யாழ். பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில் பழைய கச்சேரி வளாகத்தில் இயங்குகின்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உப அலுவலகத்துக்கு இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே வார நாள்கள் அனைத்தும் அலுவலக நேரங்களில் பொதுமக்கள் தங்களது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப்புலவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 8

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு, கடந்த சனிக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது.


இதன்போது தலைவராக சைவப்புலவர் சி.கா.கமலநாதன், செயலாளராக சைவப் புலவர் செ.த.குமரன், தேர்வுச்செயலாளராக சைவப்புலவர் கந்தசத்தியதாசன், பொருளாளராக சைவப்புலவர் ச.முகுந்தன், உபதலைவர்களாக சைவப்புலவர் வ.தயாபரசிவம், சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், சைவப்புலவர் சிவானந்தஜோதி ஞானசூரியம், சைவப் புலவர் சா.பொன்னுத்துரை, உபசெயலாளர்களாக சைவப்புலவர் செ.பரமேஸ்வரன், சைவப்புலவர் பொ.சந்திரவேல், உபதேர்வுச் செயலாளர்களாக சைவப்புலவர் சண்முக வடிவு தில்லைமணி, சைவப்புலவர் லீலாவதி அருளையா, பரப்புரைச் செயலாளர்களாக சைவப்புலவர் கவிதா கதிரமலை, சைவப்புலவர் ஜீவன் பிரசான், சைவப்புலவர் பாலன் சுதாகரன், சைவப்புலவர் யோ.கஜேந்திரா, சைவப்புலவர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் ஆகியோரும், நிர்வாகசபை உறுப்பினர்களாக சைவப்புலவர் சி.நந்தகுமார், சைவப்புலவர் ருத்திராதேவி பகீரதன், சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம், சைவப்புலவர் சு.சிவரூபன், சைவப்புலவர் சு.தேவமனோகரன், சைவப்புலவர் வ.உதயசங்கர் ஆகியோரும் போசகராக சைவப்புலவர் செ.நவநீதகுமார், உள்ளகக் கணக்காய்வாளராக சைவப்புலவர் சி.நந்தகுமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-ரி)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் அண்மையில் வணிகர் கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ்.வணிகர் கழகத்தின் தலைவராக ச.சிவகுமரன், உபதலைவராக இ.ஜெயசேகரன், செயலாளராக ச.சிவலோகேசன், உபசெயலாளராக ஜோ.செ.அலெக்ஸ் நிக்ஷன், பொருளாளராக செ.கஜன் ஆகியோரும், நிர்வாகசபை உறுப்பினர்கள் 16 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-ரி)



# விளைச்சலின் ஒருபகுதி பொருண்மியம் நலிந்தோருக்கு!

### கண்டாவளை விவசாயி முன்மாதிரி

**கிளிநொச்சி, பெப். 8**

**கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் கிழக்கைச் சேர்ந்த விவசாயியொருவர், பொருண்மியம் நலிந்த மக்களுக்கு தனது விளைச்சலின் ஒரு பகுதியை வழங்கியுள்ளார்.**

இராஜரட்ணம் இராஜேந்திரம் என்ற விவசாயி விவசாயத்தையே தனது வாழ்வாதாரமாகக்கொண்டு 20க்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றார். கடந்த எட்டு வருடங்களாக தனது விளைச்சலின் ஒரு பகுதியை பொருண்மியம் நலிந்தோருக்கு இலவசமாகப் பகிர்ந்து கொடுத்து வருகின்றார். இந்த வருடம் உரப் பற்றாக்குறையால் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்ட நிலையிலும் 35 குடும்பங்களைத் தெரிவுசெய்து தலா ஒரு மூடை நெல் வீதம் வழங்கியுள்ளார். (ம-113)

*முகமாலையில்*

## கண்ணிவெடிகள் அகற்றும் களத்துக்கு ஜப்பான் தூதரக அதிகாரிகள் விஜயம்

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் களத்துக்கு ஜப்பானிய தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முகமாலை அல்லிப்பளை பகுதியில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் சார்ப் நிறுவனத்தால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக முகமாலை பிரதேசத்துக்கு விஜயம் செய்த ஜப்பானிய தூதரக அதிகாரியான மிசாரோ மற்றும் அதிகாரிகள், கண்ணிவெடி அகற்றும் களத்தையும் அலுவலகத்தையும் பார்வையிட்டு வெடிபொருள் அகற்றலில் இருக்கின்ற தாமதங்கள், இடர்பாடுகள் மற்றும் பணியாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டனர். (ம-ரி-6)

## பயிர்களைச் சேதப்படுத்தாத மாடுகளும் பிடிக்கப்படுகின்றன

### கெருடாவிலில் சம்பவம் பொலிஸில் முறைப்பாடு

சாவகச்சேரி, பெப். 8

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் பயிர்களைச் சேதப்படுத்தாத மாடுகளையும் பிடித்துச்சென்று தண்டம் அறவிடப்படுகின்றது என்று அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். வயல் நிலம் அல்லாத மேட்டு நிலத்தில் மாடுகளை மேய்ச்சலுக்குக் கட்டிவிட்டு மாடுகளுக்குத் தண்ணீர் எடுக்கச்சென்ற நேரத்தில் குறித்த மாடுகளை கமக்கார அமைப்பினர் பிடித்துச் சென்று தண்டம் அறவிடுகின்றனர் என்று அந்தப் பெண் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (ச-125)

## மியான்மரில் இருந்து அரிசி இறக்குமதி



கொழும்பு, பெப். 8

சந்தையில் அதிகரித்துவரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக மியான்மரில் இருந்து ஒரு லட்சம் மெற்றிக் தொன் வெள்ளை அரிசியை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒரு மெற்றிக்தொன் அரிசி 445 அமெரிக்க டொலர் என்ற அடிப்படையில் இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் 20 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்து, அதை அவ்வப்போது சந்தைக்கு வெளியிட வர்த்தக அமைச்சு உத்தேசித்துள்ளது. இந்த அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை மக்கள் வங்கிக்கு வழங்கவேண்டும் என்று வர்த்தக அமைச்சு மத்திய வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ-இ)



## பெண்கள் வட்டத்துக்கான அலுவலகம் திறந்துவைப்பு

வவுனியா,பெப்.8

எழுச்சியின் கரங்கள் பெண்கள் வட்டத்தின் அலுவலகத் திறப்பு விழாவும், இரண்டாம் ஆண்டு விழா நிகழ்வும் வவுனியா சிதம்பரநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பெண்கள் வட்டத்தின் தலைவர் வி. லோகேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா உதவிப் பிரதேச செயலாளர் பிரியதர்சினி சஜீவன் கலந்துகொண்டார். பெண்கள் வட்டத்துக்கான புதிய கட்டடம் உதவிப்பிரதேச செயலாளரால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டதுடன், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-110)

## கௌரவிப்பு

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த முதலாம் திகதி முற்பகல் 11 மணிக்கு பொன்சபாபதி மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆசிரியர் நலன்புரி சங்கத் தலைவர் சு.வரதராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அதிபர் மு.பிரேம்குமார், ஆசிரியர்களான யசோதா இராமமூர்த்தி, சசிகலா செல்வராஜேஸ்வரன், கோ.பரணிதரன், மு.ஜெயக்குமார், ந.மதுராகரன், மு.ஜெயக்குமார், ராஜரஞ்சினி பிரேம்குமார், க.கனகலிங்கம்,நிஷாளினி புவிதாஸ், க.குகதாசன், திருவளர்ச்செல்வி சுரேஸ்குமார் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியர் ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கல்விசாரா ஊழியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலர் பற்றாக்குறையால் மருந்து இறக்குமதி பாதிப்பு

*விலைகளை அதிகரிக்குமாறு இறக்குமதியாளர்கள் கோரிக்கை*

**கொழும்பு, பெப்.8**

**மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதத்தைத் திறக்க டொலரை விடுவிக்க முடியா விட்டால், மருந்துகளின் விலைக்கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் 15 சதவீதத்தால் விலையை அதிகரிக்கவேண்டும் என்று மருந்து இறக்கு மதியாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**



அதேநேரம், தற்போதைய நிலைமையில் மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக கடன் கடிதங்களை திறக்க தேவையான டொலரை வழங்கமுடியாது என வர்த்தக வங்கிகள் தெரிவித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சுடன் இணைந்து 2021 ஓகஸ்ட் மாதம் மருந்துகளின் விலையை 9 சதவீதத்தால் உயர்த்த ஒப்புதல் அளித்துள்ளது. ஆயினும் அது அமெரிக்க டொலரின் மதிப்பு 176 ரூபாவாக இருந்த காலகட்டம் என்றும் இப்போது டொலரின் மதிப்பு ரூ. 230 என்றும் இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, மூலப்பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால், உள்ளூரில் பரசிட்டமோல் உற்பத்தி செய்வது கூடக் கடினமாகி வருகின்றது என்று மருந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# மைத்திரியோ, சஜித்தோ எவருமே சவால் இல்லை!

*மஹிந்தானந்த கூறுகின்றார்*

கொழும்பு, பெப்.8



ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி, சஜித், அநுரா, சம்பிக்க, ரணில் ஆகியோர் போட்டியிட்டாலும், அவர்கள் எமக்குப் பெரும் சவால் அல்ல என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை கருத்திற்கொண்டு, கடந்த இரண்டுவருட காலமாகச் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் இருந்து விலகியிருந்தோம். கிடைத்த சந்தர்ப்பத்தை எதிர்த்தரப்பினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் இடம்பெறும் காலம்வரை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் கட்டம் கட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளன. சாதாரண தரப் பரீட்சையில் தோல்வியடைந்த ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

60ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி செயற்றிட்ட பணிகள் செயற்படுத்தப்பட்டன. கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டம் சிறந்த முறையில் வெற்றி பெற்றுள்ளது. நாட்டு மக்கள் உயிர்வாழ்வதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் ஏற்பட்டிருந்தால் நாட்டையும், நாட்டு மக்களையும் கடவுள்தான் காப்பாற்றியிருக்கவேண்டும். கொரோனாத் தொற்றால் அதிக மரணங்கள் பதிவாகிய நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பிடித்திருக்கும். மைத்திரி, ரணில் முரண்பாட்டுக்கு நாட்டு மக்கள் பலியாகியிருப்பார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க, மைத்திரிபால சிறிசேன, பாட்டலி சம்பிக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளார்கள். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இவர்கள் ஒரு சவால் அல்ல.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவே வெற்றி பெறும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவே மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவார் - என்றார். (எ-இ)

# சுவிஸ் தூதரக ஊழியரின் வழக்கு ஓகஸ்ட் மாதம்

கொழும்பு, பெப்.8

2019 ஆம் ஆண்டு இனந்தெரியாத சிலரால் தான் கடத்தப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொய்யான வாக்குமூலங்களை வழங்கினார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள சுவிஸ் தூதரகத்தின் முன்னாள் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி சாட்சிய விசாரணையை ஆரம்பிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பல்லல்ல உத்தரவிட்டார்.

இதேவேளை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்று குற்றப்பத்திரிகையின் ஆங்கில மொழி பெயர்ப்பொன்றை குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் திறந்த நீதிமன்றத்தில் கையளித்துள்ளனர்.

வழக்கின் முதலாம் மற்றும் இரண்டாவது சாட்சிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்பவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்களால் தான் கடத்தப்பட்டார் என்று கூறி, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் பொய்யான வாக்குமூலங்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் சுவிஸ் தூதரகப் பணியாளர் மீது கொழும்பு உயர் நீதிமன்றினால் குற்றப்பத்திரிகை கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (எ-இ)

# கோத்தா அரசை வீழ்த்த இடமளிக்க முடியாதாம்

கொழும்பு, பெப்.8

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்த ஒருபோதும் இடமளிக்கமுடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்தார்.

கம்பளையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா மகளிர் அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் குறித்து அரசியல் மட்டத்தில் பல்வேறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. நான் வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைக் கூட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் சிறந்தமுறையில் நிர்வகிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அவர் எவ்வாறு நாட்டை பாதுகாப்பார்?

முட்டாள்தனமான யோசனைகளால் ஐக்கிய மக்கள் சக்தி தற்போது ஐந்தாக பிளவடைந்துள்ளது. கட்சியின் பெயரில் மாத்திரமே ஐக்கியம் உள்ளது. உண்மையில் கட்சிக்குள் பெரும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. கட்சியை சீர் செய்ய எதிர்க்கட்சித் தலைவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை-என்றார். (எ-இ)

# வெற்றியோ, தோல்வியோ இனி சு.கட்சி தனிவழியே

*கட்சியின் உபதலைவர் திட்டவட்டம்*

வெற்றியோ,தோல்வியோ சுதந்திரக் கட்சி இனித் தனித்தே தேர்தலில் போட்டியிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் கருத்துகளுக்கு அரசாங்கம் மதிப்பளிப்பதில்லை. பங்காளிக் கட்சிகளுடன் ஒன்றிணைந்து முக்கிய தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படுவதில்லை. பொதுஜன பெரமுன தன்னிச்சையான தீர்மானங்களை செயற்படுத்துகிறது.

அரசாங்கத்தின் மீதான மக்களின் வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறதே தவிர குறைவடையவில்லை. தற்போதைய நிலைமையில் எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் அரசாங்கம் நிச்சயம் படுதோல்வியடையும் என்பதாலேயே உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது-என்றார். (எ-இ)

# அமைச்சர்கள், எம்.பிக்களின் செலவைக் குறைக்க பணிப்பு!

கொழும்பு, பெப்.8

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நிதி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து எரிபொருள் கொடுப்பனவுகளைப் பெறும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களின் எரிபொருள் செலவினங்களை மட்டுப்படுத்தவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொலைபேசி மற்றும் மின்சார செலவுகள் போன்ற அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவுகளையும் கண்டிப்பாக கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள நிதியமைச்சு, அனைத்து அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் தொடர்ச்சியான சிறப்பு அறிவுறுத்தல்களை அனுப்பியுள்ளது.

டிசெம்பர் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையிலும், ஜனவரி 12ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையிலும் உள்ள உத்தரவுகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தவிர வேறு எந்தத் திட்டங்களுக்கும் நிதி கோருவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அனைத்து அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு நிதியமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடனில் வாழும் தேசம்

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலைமையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. நாட்டில் அனைத்துப் பொருள்களின் விலைகளும் உச்சம் தொட்டிருக்கும் நிலையில், இலங்கை அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்காக ஒவ்வொரு நாடுகளிடமும் கையேந்திக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் இந்த நிலைமைக்கு கொரோனாத் தொற்றுக் காரணம் அல்ல என்று ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் பங்காளிகளே ஒப்புக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயற்பாடுகளே இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான காரணிகளாக அமைந்திருக்கின்றன. ஆனால் இப்போதும் கோத்தாபய அரசாங்கம் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கணக்காக வெட்டி வீராப்புப் பேசி இன்னும் இன்னும் நாட்டை படுகுழிக்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றது.

பருப்புக்கு ஒரு நாடு, அரிசிக்கு ஒரு நாடு, அத்தியாவசியப் பொருள்களுக்கு ஒரு நாடு என்று ஆட்சியிலுள்ள அரசு கடன் கேட்டு உலகில் உள்ள அத்தனை நாடுகளுக்கும் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஏற்கனவே வரம்பற்றுப் பெற்ற கடன்களால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நிலையில், இப்போது பெறும் கடன்களால் நாடு மீள முடியாத பெரும் இடருக்குள் சிக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இருக்கப்போவதில்லை. அந்த இடரை நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் காலம் வெகு தொலைவிலும் இல்லை.

நாட்டில் இப்போது எரிவாயு, பால்மா என அனைத்துப் பொருள்களும் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன என்று அரசாங்கம் கூறினாலும் யதார்த்தம் அவ்வாறு இல்லை. சந்தைகளில் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு நீடிக்கின்றது. பல பொருள்களின் விலைகள் சாதாரண மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத உச்சத்தை எட்டியிருக்கின்றன. வருமான மார்க்கம் இன்றி அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நகர்த்த முடியாது தவிக்கும் மக்களுக்கு இனிவரும் காலம் இதைவிடவும் கொடுமையாக இருக்கப் போகின்றது என்பதுதான் உண்மை.


அரசாங்கம் பொருத்தமற்ற காலத்தில் கொண்டுவந்த இயற்கை விவசாயத் திட்டம் நாட்டின் உணவு உற்பத்தியில் பலத்த அடியை ஏற்படுத்தியிருக்கின்றது. நெல் விளைச்சல் எப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது. ஏனைய விவசாயச் செய்கைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் பாதிப்புக்களைப் பற்றிய எந்தவிதப் பிரக்ஞையும் இன்றியே அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் எதிர்காலமே கேள்விக்குறியாகியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும் ராஜபக்ச குடும்பம் தங்கள் அரசியல் எதிர்காலம் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. ராஜபக்ச குடும்பத்துடன் ஒத்தூதி, ஆதாயம் தேடிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் கதைகளைக்கூறி மக்களை ஏமாற்றவே முயன்று கொண்டிருக்கின்றனர். நாட்டை இந்த இக்கட்டில் இருந்து மீட்டெடுப்பதற்கான திட்டங்களோ, பொருளாதாரக் கொள்கை வகுப்போ இன்றி, சர்வதேச நாடுகளிடம் யாசகம் பெற்று காலத்தைக் கழித்து விடவே முயல்கின்றனர்.

வெளிநாடுகளிடம் இருந்து பெறப்படும் கடன்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தற்காலிகத் தீர்வைக் காணவே அரசு முயற்சிக்கின்றது. ஆயினும் நீண்ட காலத்துக்கு இவ்வாறான தற்காலிகத் தீர்வுகள் மூலம் நாட்டைக் கொண்டுநகர்த்த முடியாது. அரசாங்கத்தின் இந்தப் போக்கால் உலக நாடுகளிடமிருந்து தொடர்ச்சியாக கடனைப் பெற்று, முழுமையாக கடனாளியாக மாறிய மெக்ஸிக்கோவைப் போன்றதொரு நிலைமையையே இலங்கை எதிர்கொள்ள நேரும். ஆனால் அது பற்றியெல்லாம் சிந்திக்காத சிந்திக்கத் தெரியாத ஆட்சியாளர்கள் இந்த நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் வாய்த்திருப்பதுதான் வேதனை.

நாளொரு நல்வார்த்தை

"கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார் அதை வென்று விடலாம்".
- அப்துல்கலாம்




### விகிதாசாரத்தை மாற்றும் வகையில்

# அநுராதபுரத்தின் 2 கிராமங்கள் வவுனியாவுடன் இணைகின்றன!

சார்ள்ஸ் எம்.பி. போர்க்கொடி



**வவுனியா, பெப். 8**

**அநுராதபுரத்தின் இரு கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும் நிலையில் அதற்கான அனுமதிகோரிய பத்திரம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது - என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

வவுனியா - ஈரப்பெரியகுளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

2015ஆம் ஆண்டில் இருந்து 2019ஆம் ஆண்டு வரையும் வடக்கு - கிழக்கில் இடம்பெறவிருந்த சிங்களக் குடியேற்றங்களை நாம் தடுத்து நிறுத்தியிருந்தோம். எனினும் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பிற்பாடு வட மாகாணத்தில் வவுனியாமற்றும்முல்லைத்தீவில் தென்பகுதியில் இருந்து சிங்கள மக்கள் அழைத்துவரப்பட்டு, குடியேற்றப்பட்டு வருகின்றனர். வடக்கில் தமிழர்களின் விகிதாசாரத்தை மாற்றியமைப்பதற்காக இது மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

அண்மையில் போகஸ்வெல கிராமத்துக்கு ஜனாதிபதி வந்த போது, ஹெப்பிட்டிகொலாவையில் உள்ள கிராமத்தில் இருந்து அநுராதபுரத்துக்குச் செல்வது கடினம் எனவும் வவுனியா நகரத்துக்குச் செல்வது இலகு என்பதால் தமது கிராமங்களை வவுனியாவுடன் இணைத்து விடுமாறு பிரதேசசபை உறுப்பினரொருவரால் கூறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அண்மையில் வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழுக் கூட்டத்தில் அநுராதபுரம் ஹெப்பிட்டிகொலாவ பிரதேச செயலகத்தின் கனகவெல என்ற கிராம அலுவலர் பிரிவையும் பதவிய பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கம்பெலிய என்றகிராம அலுவலர்பிரிவையும் முழுமையாக வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான அனுமதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக நாம் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல்கொடுத்து வருகின்றோம் - என்றார். (ம-110)

## கொரோனாவால் முதியவர் சாவு!

கிளிநொச்சி, பெப். 8

கொரோனாத் தொற்றால் கிளிநொச்சி பூநகரி - கறுக்காய்தீவுப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சதாசிவம் செல்லத்துரை (வயது-87) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 4ஆம் திகதி காய்ச்சல் காரணமாக கிளிநொச்சி மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியானது. இந்நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (வ-113)

நாளை

09.02.2022
புதன்கிழமை
தை 27

சுபநேரம் : 05.05 - 06.35
ராகுகாலம் : 12.35 - 02.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 • 08 • 1964



மறைவு
16 • 01 • 1997

# சீவரத்தினம் உதயகுமார்

## (கலட்டிக் கண்ணன்)

திதி: அட்டமி

காலநூற்றாண்டு கரைந்தோடிலும்
கண்ணன் உன் தடம் எங்கும் எதிலும்!
நாள்தோறும் நாம் கடக்கும் முகமெலாம்
கண்ணன் உன் பெயர் சொல்லி
- நினைந்திடும்!
வீழ்வம் என நினைத்தோர் கண்முன்
வாழ்ந்து காட்ட வழிசெய்தே தான்
- விடைபெற்றாய்
சூழ்ந்தது சதி என்றாகிலும் இன்றும்
வாழ்வது உன் பெயர்தானே - கண்ணா!

பிள்ளைகள் உமை தேடியது போய்
பேரரும் உமை தேடுகிறார்!
ஊர் சொல்லும் பெயரன் உம்மை
உள்ளூர நினைந்துருகி தேற்றுகிறோம்
மாண்டவர் வருவதில்லை!
ஆண்டவர் அழிவதில்லை!
நீங்கள் இன்றும் எம் ஒவ்வொருவர்
- செயலிலும்
வாழ்கிறீர்! ஆள்கிறீர்!
என்றும் வாழ்வீர்! ஆள்வீர்!

ஓம் சாந்தி!

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி கதிர்காமநாதன்

**அன்னை மடியில்**
**10 - 01 - 1951**

**இறைவன் அடியில்**
**06 - 02 - 2022**



நயினாதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி கதிர்காமநாதன் அவர்கள் நேற்று முன்தினம் 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கொழும்பு 5ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் இராமசாமிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற முருகேசு நாகரெத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும்,வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் (Director, Kathirgamanathan Health Care Pvt. Ltd, Mannar.) அன்புத் துணைவியாரும், வைத்தியகலாநிதி சுஜாதா (G.P ) லண்டன், வைத்தியகலாநிதி சுதாகர் (மன்னார் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு பிரதேச வைத்திய அதிகாரி மற்றும் அடம்பன் சுகாதார வைத்திய அதிகாரி) அவர்களின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி ப. சரவணன் (விசேட வைத்திய நிபுணர், லண்டன்) திருமதி கார்த்திகா அவர்களின் பாசமிகு மாமியாரும், செல்வி. சுவீனா (லண்டன்), செல்வி. சுவேதா (லண்டன்), செல்வி. சங்கவி ஆகியோரின் பாசமிகு பேத்தியும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் நாகேஸ்வரி, காலஞ்சென்ற விஜயலட்சுமியின் மைத்துனியும், காலஞ்சென்ற மு. வரதராஜா (படத் தயாரிப்பாளர் - சென்னை), மு.பாலசுப்பிரமணியம் (கனடா), மு.கனகேந்திரநாதன் (தென் ஆபிரிக்கா), லயன் Dr க.மு. பத்மநாதன் (வெஸ்கோ) யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும், திரு.மு.சு. நடராசா, (பிரபல வர்த்தகர் கொழும்பு) மற்றும் காலஞ்சென்றவர்களான சுந்தரேஸ்வரி (கனடா), தியாகராஜா (இலங்கை இராணுவ அதிகாரி), செல்வராசா (முகாமையாளர் தேசிய வீடமைப்பு அதிகாரசபை - வவுனியா) மற்றும் திருமதி. சு. பரமேஸ்வரி, இ. இரட்ணராஜா (உத்தரவு பெற்ற நில அளவையாளர்), திருமதி. சந்திரசேகரம் ஞானேஸ்வரி (மெல்பேன் - அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி பூமகள் (ஓய்வுநிலை அதிபர்), காலஞ்சென்ற சி. நடராசா (இளைப்பாறிய பிரதமலிகிதர்) மற்றும் திருமதி. இ. இராஜேஸ்வரி (ஓய்வு உதவிப் பிரதேச செயலாளர்) காலஞ்சென்ற ரி. சண்முகநாதன் (ஆசிரியர்), சி. சந்திரசேகரம் (உத்தரவு பெற்ற நில அளவையாளர் - அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் மைத்துனியும், திருமதி ப. பத்மா அவர்களின் உடன்பிறவா சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2022 ) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், லயன்ஸ்கழக உறுப்பினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**வைத்தியகலாநிதி**
**மு. கதிர்காமநாதன்**
**குடும்பத்தினர்.**
**பெரியகடை, மன்னார்.**

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
18.09.1940

இறப்பு
07.02.2022

## அமரர் திரு. அம்பலவாணர் முத்தையா

அன்புச் சகோதரனே ஆருயிர் தாய் மாமனே!
ஒரு தாய் வயிற்றில் உதித்தோம்
ஊர்போற்றும் சகோதரராய் வாழ்ந்தோம்
நல்வாழ்க்கை அமைத்துத் தந்து
நலமுடனே வாழ வைத்தீர்
என்மேல் மட்டுமல்ல என் குழந்தைகள் மீதும்
உயிர் வைத்து தாய்மாமன் பாசத்தில்
எள்ளழவும் குறையாமல் உச்சிமுகர்ந்து
அள்ளி அணைத்து அறிவுரைகள் பல கூறி
வாழ்ந்து வந்த காலம் அது. இன்னும் நினைவுகளாக...
அன்பான இல்வாழ்க்கை அமைத்துத் தந்தேன்
பண்பான மனையாள் கிடைத்தும்
ஆண்டவன் நல்வாழ்க்கை வாழ்ந்திட நீண்ட ஆயுளை
தரவில்லை உன்னவளுக்கு
உங்களுடன் வாழ்ந்து வந்த
நல்ல நினைவுகளை மனதிலே நிரப்பி
என் மழலைகளுக்காக நானும்
உம் மழலைகளுகாக நீரும்
வாழ்ந்து வந்த வேளையிலே
கூடி வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
அண்ணன் அருகில் இருக்கிறார் என்ற
ஆறுதலில் வாழ்ந்து வந்தேன்.
மரணப்படுக்கையிலே பரனை நினைத்து நீர்
படுத்திருந்த காட்சி அது வாட்டிவதைத்ததுவே
பாசமாய் நான் பருக்கிய பாலுடன்
இறைவனிடம் பாசமாய் போனீரே!
இன்னொரு பிறப்பு இருந்தால்
இணைபிரியாது வாழ்ந்திட இறைவனை வேண்டி
எங்கள் கண்ணீரில் மாலை கோர்த்து
காலடியில் சமர்ப்பித்து இறையடியில்
இளைப்பாற இறைவனிடம் வேண்டுகின்றோம்

தங்கள் பிரிவால் துயருறும்
சகோதரி சண்முகவடிவேல் நாகேஸ்வரி
பிள்ளைகள்

(CS 42791) (3/6)


# உருமாற்றமடைந்த அனைத்து வகை கொரோனா வைரஸுக்கும் ஒரே தடுப்பூசி!

## இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

புதுடில்லி, பெப்.8

இந்திய விஞ்ஞானிகள் கொரோனா வைரஸின் அனைத்து திரிபு வகை உருமாற்றங்களையும் எதிர்த்துச் செயற்படக்கூடிய தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் காசி நஸ்ருல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இணைந்து இந்தத் தடுப்பூசியை உருவாக்கி உள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் காலங்களில் கொரோனா வைரஸ் எவ்வித மாற்றங்கள் அடைந்தாலும் அதனை எதிர்த்து இந்தத் தடுப்பூசி திறம்பட செயலாற்றும் எனவும் கொரோனா வைரஸ் உட்பட தீங்கு தரக்கூடிய 6 வகையான வைரஸ் குடும்பங்களைச் சேர்ந்த வைரஸ்களையும் எதிர்க்கும் திறன் கொண்ட ஒரே தடுப்பூசி இது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-இ)



முதுபெரும் திரைப்படப் பாடகி லதா மங்கேஷ்கர் உடலுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தியதையடுத்து அரச மரியாதையுடன் உடல் தகனம் செய்யப்பட்டது. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று துணிச்சலாக சில முடிவுகள் எடுத்து நன்மை காண்பீர்கள். நண்பர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

**இடபம்:** நீண்டகால எதிர்பார்ப்பு நிறைவேறுவதால் மகிழ்ச்சி கூடும். பணியில், தொழிலில் புதிய விஷயங்களை கற்றுக்கொள்வீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மிதுனம்:** வாழ்க்கை பற்றி இன்று புதிய தீர்மானங்கள் எடுப்பீர்கள் மறைமுக விமர்சனங்களை பற்றிக் கவலைப்பட வேண்டாம். அறிவாற்றல் அதிகரிக்கும்.

**கடகம்:** தாழ்வுமனப்பான்மை வராதபடி கவனமாக இருங்கள். முன்பு இருந்த உடல் அசதி நீங்கும். மனதில் நிம்மதி நிலவும். தொழில், பணியிடத்தில் பிறரிடம் தெளிவாகப் பேசுவீர்கள்.

**சிம்மம்:** வாகனம் அடிக்கடி தொந்தரவு தந்துகொண்டிருந்த நிலை இன்று மாறும். மனதில் தேவையற்ற கற்பனை பயங்கள் வந்துசெல்லும். பிரச்சினைகளை பெரிதுபடுத்தாமல் இருக்க வேண்டும்.

**கன்னி:** பணியாளர்கள் கடினமாக உழைத்து நன்மை பெறுவார்கள். கவலைகள் எளிதாகத் தீர்ந்துவிடும். உங்களின் புகழ் அதிகரிக்கப்போகிறது. தாயாரின் உடல்நலம் முன்பை விட சிறப்பாக இருக்கும்.

**துலாம்:** குழந்தைகள் மகிழ்ச்சி அடைவர். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். வாகனத்தை கவனமாக ஓட்டுங்கள். உறவினருக்கு உதவுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கவலை ஒன்று நீங்கும்.

**விருச்சிகம்:** உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். செயல்களில் நேர்த்தி அதிகரிக்கும். பிறரிடம் மென்மையாக பதில் சொல்லி நன்மை பெறுவீர்கள் பரபரப்பு நிறைந்த நாள். மற்றவரிடம் கருணை காட்டுவீர்கள்.

**தனுசு:** கோபத்தைக் குறைப்பீர்கள். நண்பர்கள் உங்களுக்கு உதவுவார்கள். வெளிநாட்டில் உள்ளவர் ஒருவரின் மூலம் உங்களுக்கு நன்மை கிடைக்கப்போகிறது. நன்மைகள் உண்டாகும்.

**மகரம்:** குடும்பத்தில் ஒருவருக்கு எதிர்பாராத நன்மை கிடைக்கும். செலவு கட்டுப்படும். உங்களின் கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும், எதிர்பாராத வகையில் நன்மை ஒன்று கிடைக்கும்.

**கும்பம்:** பணியாளர்களுக்கு எதிர்பாராத வருமானம் உண்டு. மகிழ்ச்சியான நாள். அரச வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். காதல் திருமணம் கைகூடும். வருமானம் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பாலின நண்பர் ஒருவர் குடும்பத்துக்கு நன்மை செய்வார். சிறிய வகையில் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டாலும் உடனே சரியாகும். வெளி மனிதர்களால் நன்மை ஏற்படும். மகிழ்வான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரம் நலிவடைந்த 100 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கும் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராமிய மற்றும் பிரதேச குடிதண்ணீர் வழங்கல் அபிவிருத்தி அமைச்சால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-214)




யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. மாணவர்கள் 50 பேருக்கும், கர்ப்பிணிப் பெண்கள் 50 பேருக்கும் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-23)





வரணி மத்திய கல்லூரியில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-159)



இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வயாவிளான் ஒட்டகப்புலம் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களுக்கு, ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்திரமுல்ல சீலரத்ன தேரரால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ரி1-23)




உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு, எதிர் காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகமும் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை சுற்றாடல் கழகமும் இணைந்து நடத்திய உலக சதுப்பு நில தின விழிப்புணர்வுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், ஏ.எம். றியாஸ் அகமட், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் க. சுப்ரமணியம், சுற்றுச் சூழல் கழகத் தலைவர் லி.கேதீஸ்வரன், கழக செயலாளர் ம.சசிகரன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். (ரி1-159)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, 200 பேருக்கு காணி பத்திரங்கள் மற்றும் 30 பேருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பரமோதயம் ஜெயராணியின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டார். முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-19)





ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ், சாவகச்சேரி தேவபிற்குடியிருப்பு பிரிவில் பழைமை வாய்ந்த உப்புக்கேணி குளம் புனரமைக்கப்படுவதற்கான அடிக்கற்கள் இந்து ,கத்தோலிக்க மத குருமாரால் கடந்த 3 ஆம் திகதி நடுகை செய்யப்பட்டன. (ரி1-9)

## வேலை வாய்ப்பு

இலங்கையின் பிரதான நிதி நிறுவனத்தின் நெல்லியடிகிளையில் உடனடி வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட ஆறுபாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (வடமராட்சி பகுதியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது) (CS 18680) (3/6)

**077 161 4336, 076 699 8256**

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

01. கனரக வாகன சாரதி - 05 வருட அனுபவம்
02. எழுதுவினைஞர் - பெண்

(அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: **077 1300 190**

## பெயர் மாற்றம்

முல்லைத்தீவு கணுக்கேணியைச் சேர்ந்த 1947 ஆம் ஆண்டு ஆனி மாதம் 23 ஆம் திகதி பிறந்த எனது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் (3777) **வல்லிபுரம் செல்லையா சிவனேசம்** என பதியப்பட்டுள்ளது. இப் பெயரிலிருந்து சிவனேசம் எனும் பெயரை நீக்கி **சிவபாக்கியம்** என்று மாற்றியுள்ளேன் என்பதையும் இனிவரு ் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் **சிவபாக்கியம்** என்றே 6. கயொப்பம் இடுவேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன் .

(CS 00963) (3/6) **சிவபாக்கியம்**

## பணிப்பெண் தேவை

கொழும்பில் வீடொன்றில் தங்கி நின்று வயோதிப மாது ஒருவரை பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை.

உணவு, தங்குமிட வசதி இலவசம்.

**சம்பளம் : 40,000/=**

தொடர்பிற்கு : **071 411 5002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 04 . 1938



இறப்பு
05 . 02 . 2022

## ஆறுமுகம் கனகம்மா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் கனகம்மா கடந்த (2022.02.05) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இரத்தினம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற (சிறைச்சாலை பாது காவலர்) ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசமணி, கனகேஸ்வரி மற்றும் சண்முகலிங்கம், இராஜராஜேஸ்வரி, சற்குணவதி, அரசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுசீலா, சுமதி, சேகர், சுகுணா, ஸ்ரீதர், பாஸ்கர், கௌரி, பிரபாகர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பொன்னம்மா, வேதநாயகி, சின்னத்துரை, சுப்பிரமணியம், லலிதா தேவி மற்றும் நல்லையா காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சசிவதனி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் மகேந்திரராசா, ராகினி, அந்தோனிப் பிள்ளை, பாலேந்திரராணி, அனோஜா, கருணாகரன், ஹேமலதா ஆகியோரின் மாமியாரும் கோபிநாத், மயூரி அமிராஜ், லோகநாத் சுரேக்கா, அரவிந்தன் கனியா, சரண்யா யோவேத், ஆர்த்திக், பிரவீந், ரோஷினி, நிக்ஷன், நிசாந்தன், கிஷ்யந்தன், சுகேதன், சிந்தியா, சஞ்சீவ், திரிஷான் திரிஷிகா, சுபீட்சன் சுவாதி, சதுஷசன், மதுஷா ஆகியோரின் பேர்த்தியாரும் சித்-தாயிஸ், சகீன், சயானா, எஷானிக்கா, அவினாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 25/1 வைரவர் கோவில் வீதி அரியாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (08.02.2022) செவ்வாய்க்கிழமை நடைபெற்று அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
0778435234, 0779506737,0766782714

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18676) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20.01.1947

இறப்பு
21.01.2021

## அமரர் சின்னத்தம்பி நாகராசா

திதி: வளர்பிறை பூர்வபக்க அட்டமி

தந்தை என்ற சொல்லின் திரு உருவமே
பிறர் கைநாடா பிறவி பெருக்கடலே
தன்னம்பிக்கையை தனித்துவமாய் கொண்டாயே!
உம் மன உறுதியே என்றும் வெல்வது இறுதியே!
உறவுகளையே உம் சிந்தனையாய் கொண்டாயே!
உம் நினைவுகளை மட்டும் பரிசாக தந்தாயே....

கைதடி
நாவற்குழி

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(CS 18678) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
13.04.1947

மறைவு
09.01.2022

கடந்த (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிய எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்

## மரியாம்பிள்ளை அல்பிரட்

அவர்களின் நினைவு நாள் நாளை (09.02.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி - கமலாதேவி மற்றும்
குடும்பத்தினர்
இணுவில் மானிப்பாய் வீதி,
(நாமகள் வாசிகசாலை அருகாமையில்)
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
077 666 8387

(CS 18677) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை பகுதியில் 02 பரப்பு காணியில் அமைந்துள்ள 05 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு 01 அறையுடன் இணைந்த மலசல கூடம் மற்றும் 02 மேலதிக மலசல கூட வசதிகள் உட்பட வீடு முழுவதும் நில மார்பிள்கள் பதிக்கப்பட்டுள்ளன. மேலும் குழநீர் கிணறு அமைந்துள்ளது.

வீடு வாங்க ஆர்வமுள்ளவர்கள் வீட்டு உரிமை யாளர்களின் வசதி கருதி முன் அனுமதி பெற்று புதன், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மதியம் 12.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை மட்டும் பார்வையிட முடியும்.

**தரகர் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு **077 592 0054**

(CS 42786(3/6)

# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

Registered with Tertiary and Vocational Education Commission under P25/0026
Established in 1972
Kaithady Manipay Road, Maruthanaarmadam, Chunnakam, Sri Lanka
Telephone No: 021224 1420 E-mail:-jcinstituteofagriculture@gmail.com

**விசேட விரிவுரையாளருக்கான விண்ணப்பம் கோரல்**

Agriculture Production Technology (HND) பயிற்சி நெறிக்கு ஆங்கில மொழி மூலம் போதிப்பதற்கு விண்ணப்பதாரிகளிடம் விண்ணப்பம் கோரப்படுகிறது.

**தகைமை - B.Sc in Agriculture**

14.02.2022 ற்கு முன்னதாக தங்கள் சுயவிபரத்துடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விரிவுரையாளருக்கான விண்ணப்பம் என குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்பத்தை யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**நேர்முக பரீட்சையின் போது உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

**நேர்முகத் தேர்வு தொடர்புகளுக்கு**
**தென்னிந்திய திருச்சபை,**
**பேராயர் ஆதீனக் காரியாலயம்,**
**வட்டுக்கோட்டை. (யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்னால்)**

(CR 37523) (3/6)

# துயர் பகிர்கின்றோம்



மண்மகிழ 31.07.1995 — கண்நெகிழ 05.02.2022

அமரர்
**விக்னேஸ்வரமூர்த்தி நிதர்சன்**
(பாதுகாப்பு உத்தியோகத்தர்- தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை கிளை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி - பருத்தித்துறை.

(CR 37528) (3/6)

# ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் கனகசுந்தரம் சிவராசா

மலர்வு 23.06.1953 — உதிர்வு 19.01.2013

திதி:- பூர்வபக்க அட்டமி


அன்பான அப்பாவே
ஆண்டுகள் பல
உருண்டோடினாலும்
ஆறாது எம் துயர்

குடும்பத்தினர்.
கொயிலாமனை,
கொடிகாமம்

(CR 37527) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1951 — மறைவு 03 . 02 . 2022



## திரு.நாகலிங்கம் நாகராஜா (கந்தையா)

யாழ். புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா Toronto, Cornwall ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நாகராஜா அவர்கள் கடந்த (03.02.2022) வியாழக் கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி (மனோன்மணி விலா உரிமை யாளர்- மன்னார்) அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற வரலெட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயதீபன், தினேஸ்குமார், சதிஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பகி, வினோதினி, நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகேஸ்வரி (ராணி- பிரான்ஸ்), காலஞ் சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் புனிதவதி (மாம்பழம்- கனடா), மங்க ளேஸ்வரி (சுவிஸ்), மனோகரன்(பிரான்ஸ்), இரதீஸ்வரி (கனடா), காலஞ்சென்ற மனோரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரவணமுத்து (பிரான்ஸ்), துரைராஜா, திருநாவுக்கரசு, சீவரட்ணம், தவரஞ்சிதமலர், வசந்தமலர், இராச மாணிக்கம், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, சந்திரமூர்த்தி, ஜெகதீச மூர்த்தி மற்றும் நடேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், யுவன், அரன், லக்ஸ்மி, சகானா, ஆரணி, கைலேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2022) கனடாவில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**283/13, புகையிரத வீதி,**
**கந்தர்மடம்.**

**தகவல்:**
**திருமதி தெட்சணாமூர்த்தி**

# மரண அறிவித்தல்

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்

மலர்வு 07 . 02 . 1969 — உதிர்வு 06 . 02 . 2022



## திரு.யேசுதாசன் தேவானந் (B.B.A)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட திரு. யேசுதாசன் தேவானந் B.B.A (Jaffna) அவர்கள் கடந்த (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வண.A.V.யேசுதாசன் காலஞ்சென்ற பாக்கியதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சேவியர் அரியநாயகம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இவாஞ்சலின் டிலானியின் அன்புக் கணவரும், பிளசினா (மாணவி, Methodist College, Colpity), பிதிலியனா (மாணவி, Methodist College, Colpity), ஜொனத்தான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவானந்தினி (Vice Principal Uduvil Girls College), பவானந்தினி (Teacher Uduvil Girls College), Rev. தயானந் (Trinity Reformed Presbyterian Church ) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், டிலோஜ் (பொறியியலாளர்) அமலதாஸ் (சமுர்த்தி-கணக்காய்வாளர்), உதயணன் (Teacher), சிந்துஜா (வைத்தியர்), ரதிகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜொகான், டில்சாந், யொய்சாந், ஆரோன் ஆகியோரின் அன்பு மாமாவும், ஜெமீமா கெரீனாவின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.02.2022) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.35 A, விவேகானந்தா வீதி,**
**வெள்ளவத்தை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**T.P: 0112363 464, 076 549 6437**

(CS 18685) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனை விடவும் அருந்திக 1,000 குற்றங்கள் செய்பவர்

*உடுவே தம்மலோக தேரர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.8

ராகம மருத்துவபீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அருந்திக பெர்னாண்டோவின் மகனை விடவும், அருந்திக பெர்னாண்டோ ஆயிரக்கணக்கான குற்றங்களைச் செய்பவர் என்று உடுவே தம்மலோக தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

புத்தளம் மாவட்டத்தில் நடக்கும் குற்றங்கள், தவறுகள், அநீதிகள்,மோசமான சம்பவங்கள் போன்று இலங்கையில் எந்த மாவட்டத்திலும் நடப்பதில்லை. அருந்திக பெர்னாண்டோவே அனைத்து மோசமான குற்றவியல் சம்பவங்களுக்கும் முன்னோடி என்பதை மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன்.

புத்தளம் மாவட்டத்தில் வசித்து வரும் பௌத்த பிக்கு ஒருவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் கடந்த வாரம் நடந்தது. எனினும் அந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்படுவதை அருந்திக பெர்னாண்டோ தலையிட்டு தடுத்தார். -என்றார். (எ-இ)

# இளைஞர் குத்திக் கொலை

கொழும்பு, பெப்.8

கொழும்பு, தெஹிவளையில் 18 வயதான இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகாயங்களுடன் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இந்த இளைஞர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்தியவர் பிரதேசத் தில் இருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# மரண அறிவித்தல்



## கந்தசாமி அன்னலட்சுமி

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி மேற்கு காளிகோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி அன்னலட்சுமி அவர்கள் 05.02.2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னு தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான வீரர், தட்சணாமூர்த்தி, அன்னம்மா மற்றும் தர்மகுலசிங்கம், குமாரகுலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கருணாநிதி, பரமநாதன், இந்திராணி மற்றும் அரியமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சௌந்தரராஜன், தனலட்சுமி, தர்மராஜா, காலஞ்சென்ற சரஸ்வதி, பார்வதி, மோகனராஜா, சிவகுமார், கிருஸ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாவதி, காலஞ்சென்ற தேவராசா, அனுசியாவதி, தேவராசன், பிரியதர்சினி, லோகமதி, பிருந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், சத்தியதாசன், ஜெயரஞ்சனி, பாலறஞ்சினி, ஜெயதாசன், காலஞ்சென்ற நிமலதாசன், பிரதீபரஞ்சனி, சிவரஞ்சனி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், மதியழகன், பார்த்தீபன், மதுரா, மயூரா, பகீரா, சாரங்கன் ஆகியோரின் அன்பு அத்தையும்,வரதலட்சுமி, நாகரத்தினம், பத்மலோஜினி, தனபாலசிங்கம், புவனேஸ்வரி, நற்குணராசா, பிரகலாதன், சசிகலா, சுபாநந்தி, சண்முகநாதன், கமலினி, ரகுராம், லேனிகா, ஜீன்மரீ ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவன், பிரியங்கா, பிரகாஸ்- சங்கீதா, ஜெனுஜன், ஜெனுஜா, பார்த்தீபா- ஆரூரன், மோகனலாவன்ஜா, கௌசிகா, தனோஜன், சுகன்ஜா, கீர்த்தனன், அஸ்வினி, கிருஷானி, சுபீக்ஷா, தியான், பிரணவன், பிரவீன், பிரதுஷ்சன், டினோஜன், அனோஜன், லக்சிகா- விதுசன், வினோஜிகா, ஜெனுசன், ஜெசிந்தன், சஞ்சய், துளசிகன், சந்தோஷ், நிலேஸ், நிருசன், நிருசிகா, அரிஸ், ஜெனிஸிகா, ஜனனி, சரன், நிகில்ராம், சகில்ராம், கியா, சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திவ்யலட்சுமி அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (08.02.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் திருநெல்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மகள் பார்வதி : 077 4634 335**
**திருநெல்வேலி.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 18669)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## செல்வி தனுஷிகா சதாசிவம் (கஜானா)

(யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி A/L 2022 கணிதப் பிரிவு மாணவி)



**அன்னை மடியில்**
**31.03.2003**

**ஆண்டவன் அடியில்**
**09.01.2022**

எங்கள் வீட்டில் எழில்கொஞ்சும் பூவாய்
இருந்தாய் தனுசியம்மா— நீ
இல்லை என்றதும் கண்ணீர் துளிகள்
கடல் போல் ஆகுதம்மா

புரியா விடையே பூமியின் கொடையே
பிரிந்ததும் முறைதானோ — இனி
பூமலர் தூவி வணங்கிட இருக்கும்
சாமியும் நீதானோ — உனை
சாய்த்தவர் கதி ஏதோ??

செல்வி தனுஷிகா சதாசிவம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் இல்லத்தில் இன்று (08.02.2022) நடைபெறும்.

**அல்வின் வீதி,**
**காரைநகர்.**

**குடும்பத்தினர்**
**0772807669**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தோற்றம்**
**04.01.1953**

**மறைவு**
**09.01.2022**

## அமரர் நல்லையா தங்கவேல்

**(ஓய்வுநிலை ஆசிரியர் – யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)**

எமது அன்பு அப்பா நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவருக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும், நேரில் வந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது முதற்கண் நன்றிகள். அப்பாவின் மறைவை கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் எம் சோகத்தில் பங்கேற்றவர்களுக்கும், இறுதிச் சடங்கில் நேரடியாக பங்கேற்றவர்களுக்கும், பூதவுடலை பார்வையிட உடனோடி வந்தவர்களுக்கும், மலர் வளையங்கள், அனுப்பிய அன்பு உள்ளங்களுக்கும், பத்திரிகைகளிலும், சமூக வலைத் தளங்களிலும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், மறைவுச் செய்தியை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். எமக்கு உணவளித்த அன்புள்ளங்களுக்கும் நன்றிகள்.

இன்று (08.02.2022) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெற்று தொடர்ந்து மதியபோசன உபசாரம் இல. 37, சேர்பொன், இராமநாதன் வீதியில் அமைந்துள்ள **ராஜா கிறீம் ஹவுஸ் - ஹம்சிகா மஹால் (முதலாம் மாடி)** இல் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**34/1, 4ஆம் ஒழுங்கை, பரமேஸ்வரா வீதி,**
**திருநெல்வேலி.**
**077 102 2648, 077 785 1910**

**குடும்பத்தினர்.**

(CS 42802) (3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்...

புளியங்குளம் பொலிஸாரால் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். 9 ஆவது சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்த ஆனந்த ராஜா என்பவர் கைது செய்யப்படவில்லை. அவருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏனைய 8 பேருக்கும் ஆதரவாக சி.எச்.ஆர்.டி. சட்ட நிறுவனம் சட்ட உதவிகளை வழங்கியிருந்ததுடன் இவர்களுக்காக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவையும் தாக்கல் செய்திருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 43 ஆண்டுகளின் பின்னர் முதன் முதலில் அமைக்கப்பட்ட ஆலோசனை சபைக்கு, 8 பேர் சார்பிலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோரிக்கை ஆராயப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பரிந்துரை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக சட்டமா அதிபரால் 8 பேரும் பிணையில் விடுவிக்கப்படுவதற்கான கடிதம் உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உயர் நீதிமன்றம் 8 பேரையும் பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவை வழங்கியது. அந்த உத்தரவுக்கு அமைவாக வவுனியா நீதிவான் நீதிமன்றால் 8 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி, விரைவில் விடுவிக்கப்படவுள்ள அரசியல் கைதிகளையும், கைது செய்யப்பட்டு குறுகிய காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் இலங்கை அரசு விடுவித்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அண்மையில் குற்றஞ்சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.5,110)

## திட்டமிட்டவாறு...

தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே இந்தக் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் உட்பட இரண்டு டசின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமையால் நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்படலாம் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.5)

## பொருளாதார...

இலங்கை மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு புதுடில்லியில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்தல் மற்றும் முதலீட்டு முயற்சிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

மேலும், மீனவர்கள் விவகாரம் குறித்தும், இருதரப்பு பொறிமுறைகளை முன்கூட்டியே மேற்கொள்வது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (ஓ-இ)

## எரிபொருள்...

கப்படவில்லையென வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள், எரிபொருளை மேலதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ-ஓ.இ)

## ரூ.52 லட்சத்து...

டைத் தளத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு தடுத்து வைத்திருந்த 135 படகுகளே நேற்று ஏலத்தில் விடப்பட்டன.

கொழும்பிலிருந்து வருகை தந்த மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் குழுவின் முன்னிலையில் ஏலம் விடப்பட்டது. 68 பேர் இதில் கலந்து கொண்டனர். நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான ஏலம் பி.ப. 2 மணிக்கு நிறைவடைந்தது. 'எல்42' என அடையாளப்படுத்தப்பட்டிருந்த ஓர் படகு மாத்திரம் 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விலை போனது. இதேவேளை காங்கேசன்துறையில் இன்றைய தினம் ஏலம் இடம் பெறவுள்ளது. (அ-ஓ.26,23)

## 13ஆவது...

வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசமைப்பில் முதன்முறையாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதைத் தேசிய இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக ஏற்கமுடியாது. இதைத் தீர்வுக்கான முதல் படியாக வைத்துக்கொண்டு நாங்கள் முன்னோக்கி நகர்ந்து வருகின்றோம்.

இந்த நிலையில், 13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது படுமுட்டாள்தனமானது. இப்படியான செயற்பாடு, இருப்பதையும் இழப்பதற்குச் சமமானது. அதனால்தான் 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி வருகின்றோம்.

13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வோர் தமிழ் மக்களின் நன்மை கருதிச் செயற்படவேண்டும். தமது சுயலாப அரசியலுக்காகத் தமிழ் மக்களை நட்டாற்றில் விடும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது - என்றார். (ஓ-22)

## மின்துண்டிப்பு...

இதேவேளை, மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பு விரைவில் கிடைத்தால் மின்வெட்டு மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ-ஓ.இ)

## வரணியில்...

பட்டுள்ளனர். நெல்லியடி முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வரணி சந்தை, இடைக்குறிச்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீர்ச்சோதனை ஒன்றை நடத்தியுள்ளனர். சிவில் உடையில் வீடொன்றுக்குச் சென்ற விசேட அதிரடிப் படையினர், சட்டவிரோத மதுபான உற்பத்தி நடைபெறுவதாகத் தெரிவித்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்தித் தாக்கினர் எனக் கூறப்படுகின்றது. சட்டவிரோத மதுபான உற்பத்திக்குரிய எந்தவொரு தடயப்பொருள்களும் அடையாளங்களும் இல்லாத நிலையிலேயே, வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டாரை அதிரடிப்படையினர் மிரட்டிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் அந்தப்பகுதியூடாக, பால் வாங்கச் சென்றுள்ளார். அவரை விசேட அதிரடிப்படையினர் பிடித்து மிரட்டி, தலையில் துப்பாக்கியை வைத்தபோது அவர் அதனைத் தட்டிவிட முயன்றார்.

அப்போது அந்த இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருகேசு பிரதீபன் (வயது - 30) என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்தனர்.

விசேட அதிரடிப்படையினர் 5பேரும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை சரணடைந்துள்ளனர். அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டனர். (அ-ஓ.20,159)

## வீதியோரத்தில்...

கிழமை காலை இளம் குடும்பத்தலைவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன் (வயது-33) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு, விடத்தல் தீவுக்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீடு நோக்கி அவர் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். ஆயினும் விடிந்த பின்னும் அவர் வீடு போய்ச் சேரவில்லை. இந்த நிலையிலே பள்ளமடுச் சந்திக்குச் சமீபமாகவுள்ள வீதியோரத்தில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்துக்கு அருகில் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த அடம்பன் பொலிஸார் விபத்தா? அல்லது கொலையா? என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஓ.56)

## துணை மருத்துவ...

சங்கங்கள் நாடு முழுவதும் நேற்று முன்னெடுத்த போராட்டத்தால் வடக்கு மாகாணத்தின் மருத்துவமனைகளின் செயற்பாடுகள் முடங்கின. இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமங்களையும் அலைச்சல்களையும் எதிர்கொண்டனர்.

தாதியர் சேவை, முழு நேர மற்றும் இடைக்கால சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் என 18 தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. இதன் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைகளுக்குச் சென்ற நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

வேலைநிறுத்த காலப்பகுதியில் அத்தியாவசிய மற்றும் அவசர சேவைகள் முன்னெடுக்கப்பட்டதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளிலும் சேவை முடங்காது என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-110)

## வடக்கில்...

கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் மிதமான மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். தொடர்ந்து 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் மழைக்கு வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நெல் மற்றும் வெங்காய அறுவடைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் முன்கூட்டியே திட்டமிட்டு அவற்றை அறுவடை செய்வது நன்மை பயக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ஓ.5)

## போத்தல்...

போத்தல் தண்ணீரின் புதிய விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை குடிதண்ணீர் போத்தல் ஒழுங்கமைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி 500 மில்லி லீற்றர் போத்தல் 50 ரூபாவாகவும், 1 லீற்றர் போத்தலின் விலை 70 ரூபாவாகவும், 1.5 லீற்றர் போத்தல் குடிதண்ணீரின் விலை 90 ரூபாவாகவும், 5 லீற்றர் போத்தல் குடிதண்ணீரின் விலை 200 ரூபாவாகவும், 7 லீற்றர் போத்தல் குடிதண்ணீரின் விலை 240 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ.இ)

# காலாவதியான தடுப்பூசியை மக்களுக்கு வழங்கவில்லை

*சுகாதார அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.8

காலாவதியான கொரோனாத் தடுப்பூசிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்காக நாட்டில் கையிருப்பில் உள்ள பைஸர் தடுப்பூசிகள் காலாவதியாகவில்லை என்பதனை தொழில்நுட்ப ரீதியில் பொறுப்புடன் கூற முடியும் எனக் கொரோனா ஒழிப்பு இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

காலாவதியான அல்லது காலாவதித் திகதியை அண்மித்த கொரோனாத் தடுப்பூசிகள் எவையும் மக்களுக்கு வழங்கப்படவில்லை. நாட்டில் 39 வீதமானவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு செல்ல குறைந்தபட்சம் 70 வீதமானவர்களுக்கு பூரணமாக தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுங்கத்திணைக்களம் வசமுள்ள அத்தியாவசிய பொருள் கொள்கலன்களை உடன் விடுவிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, பெப். 8

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சந்தையில் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதை இலக்கு வைத்தே, ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையிலான குழுவொன்றை நியமிக்கவும், ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருள்களை விடுவிப்பது தொடர்பிலான விசேட கூட்டமொன்று, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பகல் நடைபெற்றது.

எதிர்வரும் உற்சவ காலத்தின் போது, உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று எடுத்துரைத்த ஜனாதிபதி, அதற்காக தற்போதிருந்தே உரிய திட்டமிடல்களை வகுக்குமாறு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருள்களின் கொள்வனவுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறும் இதன்போது, குறுகிய எண்ணங்களுடன் அதிகப்படியான பொருள்



களை இறக்குமதி செய்வதற்கோ அல்லது பொருள்களைப் பதுக்கி வைப்பதற்கோ இடமளிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைச் சந்தைக்கு விநியோகிப்பது தொடர்பில் முறையான பொறிமுறையொன்று உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்திய ஜனாதிபதி, இது தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வைப் பணிகள், புதிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஒ-5)

**தேவை**

கடையுடன் இணைந்த வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு : 077 592 5458 (CS 18681) (3/6)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

பண்ணை வேலைக்கு அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

தொடர்புக்கு : 075 771 3364 (CS 18682) (3/6)

**வீட்டு உதவியாளர் தேவை**

வீட்டில் தங்கி இருந்து வீட்டு உதவிகள் செய்யக் கூடிய மற்றும் இரண்டு வயது குழந்தையை பார்க்க கூடிய வீட்டு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
இடம்: சாவகச்சேரி.

தொடர்பு: 0777 002 552 (CR 37529) 1-6

**English Classes**

Gr-1 to O/L
வீடு வந்து கற்பிக்கப்படும்.
Grammar and Syllabus
T.P: 077 3314 608

**காணி விற்பனைக்கு**

ஊரெழு வடக்கு, பலாலி வீதி, வீரகத்திப் பிள்ளையார் கோவிலிருந்து 50 m தூரத்தில் அமைந்திருக்கும் 8 பரப்புக் காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும்.

076 940 1045 (cs.42755) (2.6)

**வீடு வாடகைக்கு தேவை**

அரச தொழில் புரியும் சிறிய குடும்பத்திற்கு நகரிலிருந்து சுமார் 3km தூரத்தில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு : 076 987 2986 (CS 18673) (3/6)

**துரித பொதிகள் சேவை**



உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 12.05.1947

ஆண்டவன் அடியில் 07.02.2022

திருமதி

## மகாலிங்கம் தவமணி

பட்டினசபை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் பட்டினசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் தவமணி நேற்று (07.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியர் - பூமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் (மகான், இ.போ.ச.பேருந்து முன்னாள் சாரதியும், யாழ். கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணைய மேற்பார்வையாளரும்) அன்பு மனைவியும், சுரேஸ்குமார் (உரிமையாளர், சிறிகுமரன்ஸ் நகை மாடம்), சதீஸ்குமார் (லண்டன்), ரமேஸ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாமகள் (கல்யாணி), சுதாமதி (சூட்டி-லண்டன்), ஜீவிதா (மாலா-பிரான்ஸ்), ஜீவானந்தன் (அதிபர்- யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், டனுசுயன், சங்கர்ஷணன், சபிர்தன், அஷ்வின், சயன், ரிதீஷ், ரினுஷா, கஜானிகா, பிரித்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பரமேஸ்வரி (பரம்), அமரர் இராசலிங்கம் (பூச்சி), அமரர் தர்மலிங்கம் (வண்டு), அமரர் சுந்தரலிங்கம் (ஓசு), பஞ்சலிங்கம் (ராசா), சந்திரலிங்கம் (தம்பி-பிரான்ஸ்), யோகலிங்கம் (காந்தி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2022) செவ்வாய்க் கிழமை பட்டினசபை வீதி, மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பட்டினசபை வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18688) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.